

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.05.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில், 1859 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள 16 புதிய துணை மின் நிலையங்களையும்,143 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் 65 துணை மின் நிலையங்களில் 853 எம்.வி.ஏ அளவிற்கு திறன் மேம்படுத்தப்பட்ட 67 மின் மாற்றிகளின் செயல்பாட்டினையும் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, எரிசக்தித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ்சந்த் மீனா, தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் தலைவர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### "நம்மை காக்கும் 48" திட்டத்தின் சார்பில் திருப்பூர் மாவட்டத்தில்

# 940 நபர்களுக்கு 2 கோடியே 78 இலட்சத்து 53 ஆயிரம் செலவு!

## ஆய்வுக்கூடத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருப்பூர், மே 21 -

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 09.05.2023 செவ்வாய்க்கிழமை அன்று சாலை பாதுகாப்பு குறித்த ஆய்வுக்கூட்டம் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் திருப்பூர் மாவட்டத்தில் அவசர ஊர்தி அணிகளில் சிறப்பாக பணிபுரிந்த அவசர ஊர்தி ஓட்டுநர் அவர்களின் சேவையை பாராட்டி சான்றிதழ் மற்றும் பள்ளிக்கல்வி கல்வித்துறையின் சார்பில் சாலைப் பாதுகாப்பு வார விழாவில் திருப்பூர் மாவட்ட அளவில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் பல்வேறு சாலை விபத்து மற்றும் காயமடைந்த 5 நபர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் காசோலைகளை அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், க.செல்வராஜ் எம்.எல்.ஏ., மேயர். ந.தினேஷ்குமார் ஆகியோர் வழங்கினர்.

ஆய்வுக்கூட்டத்தில் பிரதீப் யாதவ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.எஸ்.வினீத், இல.பத்ம நாபன், பவன்குமார் ஜி.கிரியப்பனவர், பிரவீன்



குமார் அபிநவ், சசாங்சாய், த.ப.ஜெய்பீம், ஸ்ருதன் ஜெய் நாராயணன், இரா.சந்திரசேகர் ரா.பாலசுப்பிரமணியன் உள்பட துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்ததாவது : -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக சாலை விபத்துகள் பற்றியும், காவல் துறையின் சார்பில் சாலை பாதுகாப்புகள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் இன்று ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. சாலை பாதுகாப்பு பொறுத்த வரையில் தமிழ்நாடு முழுவதும் ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு கருத்துக்கள் கேட்கப்பட்டு விபத்துக்களை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விபத்துக்களை குறைப்பதற்காக தமிழ்நாடு முழுவதும் 355 கோட்ட பொறியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 53 கோட்ட பொறியாளர்களுக்கு சாலை ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. 18 வயதுக்கு கீழ் உள்ள அனைவரும் இருசக்கர வாகனத்தை ஓட்டக் கூடாது என்பதை காவல் துறை கண்காணித்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச்செல்லும் ஆட்டோக்கள் வரையறுக்கப்பட்ட மாணவர்களை மட்டுமே ஏற்றி செல்ல வேண்டும், பொதுமக்கள் பேருந்து படிக்கட்டுகளில் பயணம் செய்வதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சரக்குந்துகளில் வரையறுக்கப்பட்ட அளவுகளை விட அதிகமாக பாரங்களை ஏற்றிச்செல்லுவதால் அதிகமாக விபத்து ஏற்படுகிறது. போக்குவரத்து துறை மற்றும் காவல்துறை இணைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாடு முழுவதும் நம்மை காக்கும் 48 திட்டத்தின் சார்பில் அனைவருக்கும் முதல் 48 மணி நேர அவசர உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்காக இலவச மருத்துவ உதவித்திட்டம் 685 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் 11,945 பயனாளிகளுக்கு ரூ.140.23 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில், திருப்பூர் மாவட்டத்தில் 4 அரசு மருத்துவமனையின் மூலம் 387 நபர்களுக்கு ரூ.2.09 கோடி மதிப்பீட்டிலும், 2 தனியார் மருத்துவமனை மூலம் 553 நபர்களுக்கு ரூ.69.53 இலட்சம் செலவு செய்யப் பட்டுள்ளது. மேலும் இந்த ஆய்வுக்கூட்டத்தில் பல்வேறு அமைப்புகளை சார்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டுள்ளார்கள். சாலை பாதுகாப்பு குறித்து பல்வேறு கருத்துக்களை இந்த ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்தால் அதனை அரசின் சார்பாக பணிகளை மேற்கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். திருப்பூர் மாவட்டத்தில் சாலை மேம்பாட்டுத்திட்டதின் மூலம் 455 கி.மீட்டருக்கு ரூ.622.00 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணி நடைபெற்று வருகிறது. முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் மூலம் நான்கு வழிசாலை திட்டம் 25 கி.மீட்டரில் ரூ.209.00 கோடி மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 72 பாலங்கள் ரூ.95.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. மேலும், சாலை பாதுகாப்பு அடிப்படையில் 236 விபத்து அதிகமாக நடைபெறும் பகுதியை கண்டறிந்து விபத்துக்களை தடுப்பதற்காக ரூ.490.00 கோடி மதிப்பீட்டில் விபத்து தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், பல்லடம் - வெள்ள கோவில் தேசிய நெடுஞ்சாலைக்கு ரூ. 322.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 55 கி.மீட்டரில் நான்கு வழி சாலையாக மேம்பாடு செய்ய பணிகள் நடைபெற்று வருகிறது. காங்கேயம், வெள்ளகோவில், பல்லடம், திருப்பூர் ஆகிய 4 இடங்களில் தேசிய நெடுஞ்சாலையொட்டிய புறவழி சாலைகள் அமைக்க வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. பொதுவாக உலகத்தால் அடையாளம் காட்டப்பட்ட திருப்பூர் மாவட்டம் அன்னிய செலவாணியை ஈர்க்கும் மாவட்டமாக உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து திருப்பூர் மாவட்டத்திற்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்ற அடிப்படையில் தான் சாலை விரிவுபடுத்துவதாக இருந்தாலும் சரி, புறவழி சாலைகள் அமைப்பதாக இருந்தாலும் சரி முன்னுரிமைகள் கொடுத்து திட்டங்கள் வகுத்து பணிகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

விபத்துக்களை பொறுத்த வரையில் தற்போது குறைந்துள்ளது. மீண்டும் விபத்துக்களை குறைக்க ஆய்வுக் கூட்டங்கள் வாயிலாக ஏற்றுமதியாளர்கள் சங்கம், உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் லயன்ஸ் கிளப் உள்ளிட்ட பொதுநல சங்கங்களை சார்ந்தோர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துக்கூறியுள்ளார்கள். இதுவரை நடத்தப்பட்ட சாலைபாதுகாப்பு குறித்து நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டங்களில் திருப்பூர் மாவட்டம் விபத்து குறைந்த மாவட்டமாக உள்ளது. நெடுஞ்சாலை துறை மூலம் தயாரிக்கப்பட்ட சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு சகோ புத்தகத்தை ரோட்டரி சங்கங்கள் அரிமா சங்கங்கள் லயன்ஸ் கிளப் உள்ளிட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அச்சடித்து புத்தகத்தை பொது மக்களுக்கு வழங்கினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் திருப்பூர் அதிக போக்குவரத்து உள்ள மாநகரம் எங்கெங்கே பாலங்கள் வேண்டும், எங்கெங்கே உயர் மட்ட பாலங்கள் வேண்டும், எங்கே ரயில்வே பாலங்கள் வேண்டும் என்று கணக்கீடு செய்து மாவட்ட ஆட்சித்தலைவரிடம் தங்கள் கோரிக்கையை தெரிவித்தால் நெடுஞ்சாலை துறை மூலம் உடனடியாக பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் விபத்துக்களை குறைப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது என அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சைதை இரா. லோகநாதன்
### மே 21 (2015)



இளமை பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு சென்னை, சைதை பகுதிக் கழகத்தில் வட்டச் செயலாளராகவும் – பகுதி துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

சைதை கூட்டுறவு வங்கி இயக்குநராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், சட்ட நகல் எரிப்பு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


# கழகத்தின் 'வைப்பு நிதி' தொ.மு.ச. பேரவை



மாநாடுகள், பேரணிகள், தேர்தல் களம் என தி.மு.கழகத்தின் எல்லா நிகழ்வுகளிலும் சிவப்புச் சட்டையுடன் ஓர் அணியைக் கட்டாயம் காணமுடியும். வழக்கமாக கரைவேட்டிவெள்ளைச் சட்டை அல்லது கருப்பு பேண்ட்வெள்ளை சட்டை அணிந்திருக்கும் கழகத்தினர் நடுவே, சிவப்புச் சட்டை அணிந்து தனித்த அடையாளத்துடன் வெளிப்படுபவர்கள் கழகத்தின் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையினர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 1949ல் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே பஞ்சாலைகள் முதல் உப்பளங்கள் வரை பல இடங்களிலும் கழகத்திற்கான தொழிற்சங்க அமைப்புகள் செயல்பட்டு வந்தன. தொழிலாளர்கள் ஆதரவுடன், சங்கத் தேர்தல்களிலும் கழகத்தினர் வெற்றி பெற்றனர்.

தனித்தனியாக இருந்த இந்த அமைப்புகளை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். 1970ஆம் ஆண்டு மே 1ஆம் நாள் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை தொடங்கப்பட்டது.

**தொழிலாளர் தினமான மே 1ஆம் நாளை ஊதியத்துடன் கூடிய விடுமுறை நாளாக அறிவித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்போதும் தொழிலாளர் பக்கம் நிற்கக்கூடியவர். தொழிலாளர் நல வாரியங்களுக்கான விதிகளை உருவாக்குவதில் இந்தியாவுக்கே முன்னோடியாக விளங்கியது கலைஞர் அரசு. உடலுழைப்புத் தொழிலாளர்களின் உரிமை காக்கும் சட்டம் வகுத்தவர் கலைஞர். பொதுத்துறை நிறுவனங்கள்தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர் நலனைக் காத்தது மட்டுமின்றி, எந்த நிறுவனத்திலும் இல்லாதவர்களான அமைப்பு சாரா தொழிலாளர்களுக்காக 36 நல வாரியங்களை உருவாக்கியதும் கலைஞர் அரசுதான். முத்தமிழறிஞர் கலைஞருடைய தொழிலாளர் நலன் சார்ந்த வெற்றிகரமான அனைத்து முயற்சிகளுக்கும் துணை நின்றது தொ.மு.ச. பேரவை. இனமானப் பேராசிரியர், நாஞ்சிலார், செ.குப்புசாமி, காட்டூர் கோபால், இரத்தினசபாபதி உள்ளிட்ட பலர் கழகத்தின் தொ.மு.ச.பேரவை வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியிருக்கிறார்கள்.**



**கோவி.லெனின்**
கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு 50 ஆண்டுகள் கடந்த தொ.மு.ச. பேரவை தற்போது போக்குவரத்து துறை, மின்வாரியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், திருச்சி பெல் நிறுவனம் உள்ளிட்ட மாநில, ஒன்றிய அரசு சார்ந்த நிறுவனங்களில் வலிமையான தொழிற்சங்க அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

இந்தியாவில் 19 மாநிலங்களில் இணைப்பு சங்கங்களைக் கொண்டிருப்பதுடன், ஒடிசா மாநில அரசின் சார்பில் சிறந்த தொழிற்சங்கமாக தொ.மு.ச. பேரவைத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்தியத் தொழிற்சங்க மையத்தின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறது. முத்தாய்ப்பாக, 2012ஆம் ஆண்டு ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 101வது மாநாட்டில் தொ.மு.ச.பேரவையின் பொதுச்செயலாளர் மு.சண்முகம் பங்கேற்று, திராவிட இயக்கத்தின் சமூக நீதிக் கொள்கை அடிப்படையிலான தொழிலாளர் உரிமைகளை எடுத்துரைத்தார்.

**திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நெருக்கடி ஏற்பட்ட நேரங்களில் எல்லாம் தலைமைக்கு உறுதுணையாகவும் நம்பிக்கைக்குரியதாகவும் தொ.மு.ச. பேரவை செயல்பட்டது. தங்களின் நலன் காக்கும் சட்டங்களை இயற்றி, ஊதிய உயர்வு ஒப்பந்தம், போனஸ் ஆகியவற்றில் உரிய முறையில் தீர்வு கண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும் அவர் தலைமையிலான கழகத்திற்கும் நன்றிக் காணிக்கை செலுத்தும் வகையில், தேர்தல் களத்திலும் பொது நிகழ்வுகளிலும் தாராளமாக நிதி அளிப்பது தொ.மு.ச. பேரவையின் வழக்கமாகும்.**

சென்னை கலைவாணர் அரங்கில் மே 16, 17, 18 ஆகிய தேதிகளில் நடைபெற்ற தொ.மு.ச. பேரவையின் 25வது பொதுக்குழு மற்றும் பொன்விழா மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்விற்குத் தலைமையேற்ற கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களிடம் 5 கோடி ரூபாய் நிதியளித்தார் தொ.மு.ச. பேரவையின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான மு.சண்முகம். தனது வரவேற்புரையில், தொ.மு.ச.வின் வளர்ச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய அக்கறையையும், அதே அக்கறையை கழகத் தலைவர் அவர்கள் காட்டுவதையும் குறிப்பிட்டார்.

தொ.மு.ச. பேரவையை தி.மு.கழகத்தின் வைப்பு நிதி என்று அடிக்கடி குறிப்பிடும் கழகப் பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பொன்விழா மாநாட்டு மேடையில் உரையாற்றும்போது, தன்னுடைய தொழிற்சங்கத் தேர்தல் வெற்றி அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டதுடன், தொ.மு.ச. பேரவையின் போராட்ட வரலாற்றையும் விளக்கினார். சிம்சன் போராட்டத்தில் பிரதாப்சந்திரனையும், உப்பளத் தொழிலாளர்கள் போராட்டத்தில் கே.வி.கே.சாமியையும் தி.மு.கழகம் இழந்ததை உருக்கத்துடன் குறிப்பிட்டார்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தன் சிறப்புரையில், "தொழிலாளர்களே தொழிலாளர்களை நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுத்து சீரிய முறையில் செயல்படும் கழகத்தின் வலிமையான துணை அமைப்பு தொ.மு.ச பேரவை" என்று குறிப்பிட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் திராவிட மாடல் அரசின் கடந்த இரண்டாண்டு கால ஆட்சியில் தொழிலாளர் நலன் காத்திடவும், அவர்களுக்கான உரிமைகளை வழங்கிடவும் அரசின் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளை, நிறைவேற்றப்பட்ட கோரிக்கைகளை எடுத்துரைத்தார்.**

கழகத்தின் துணை அமைப்பாக கழகத்திற்கு என்றும் துணை நிற்கும் அமைப்பாக விளங்கும் தொ.மு.ச. பேரவையின் செஞ்சட்டை அணிந்த நிர்வாகிகளும் உறுப்பினர்களும் கலைவாணர் அரங்கம் அதிரும் அளவுக்கு முதலமைச்சர் அவர்களின் உரைக்கு கைத்தட்டல்களால் வரவேற்பு அளித்தனர்.

தொ.மு.ச. தோழர்கள் தங்கள் உடல்நலத்தில் அக்கறை செலுத்த வேண்டும் என்றும், தங்கள் பிள்ளைகளை உயர்கல்வி கற்கச் செய்ய வேண்டும் என்றும், கல்விதான் அசைக்கமுடியாத சொத்து என்றும் வலியுறுத்திய கழகத் தலைவர், "சமதர்மச் சிந்தனைக்குப் போராடும் அரசியல் கூர்மை பெற்றவர்களாகத் தொழிலாளர்களை வளர்த்தெடுக்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

**பெரியாரையும் அண்ணாவையும் சந்தித்திருக்காவிட்டால் நான் கம்யூனிஸ்ட் ஆகியிருப்பேன் என்றவர் தொழிலாளர்களின் தோழரான முத்தமிழறிஞர் கலைஞர்.**

**அவர் பெற்ற திருமகன், தன் பெயரிலும் செயலிலும் அதனையே மெய்ப்பித்து வருகிறார்.**